''இவனைத் தெரியுதா தொரைகளே யாருன்னு...?'' திடீரென ஒருவனை இழுத்து ஜன்னலுக்கு முன் நிறுத்தினான் ஆறுமுகம்.

பெரியதுரையும் ஒரு சின்னதுரையும் பேசாமலிருக்க, ஆறுமுகத்து டிவிஷன் துரைமட்டும் லேசாகச் சிரித்துக் கொண்டார்.

''இது வந்து என் தோட்டத்து ஆள்...''

''அவ்வளவுதானுங்களே தெரியும்... பேர் தெரியாது இல்லியா...''

பெரியதுரை சின்ன துரையைப் பார்க்க, சின்னதுரை சிலிங்கத்தைப் பார்த்தார், ''இம்பொசிபல்...'' என்று முனகியபடி.

''இது யாருன்னு சொல்ல முடியுமா?'' ஒரு பெண்ணை இழுத்து நிறுத்தினான் ஆறுமுகம்.

''என் டிவிஷன் ஆள்...'' மறுபடியும் ஆறுமுகத்து டிவிஷன் துரையே கூறினார்.

''இது?''

''மை மேன்...'' இப்போது கூறியவர் மற்ற துரை.

''உங்களுக்கும் பேர் நினைவுல இல்லே தானுங்களே...?''

''தட்ஸ் கிரைட்...''

''அது சரிதானே ஆறுமுகம். நம்ம சின்ன துரைமார்கள் ரெண்டுபேரும் மும்மூணு டிவிஷன் பார்க்கிறது. ஒவ்வொரு தொரைக்கும் ஏழே ஆயிரம் பேர் இருக்கு. அத்தனை பேரையும் பெயர்ப்படி தெரிஞ்சு வச்சிருக்க முடியாதுதானே...?''

''ஞாயங்க...! முடியாதுதான்...! ஆனு அதை ஒரு சாதகமா வச்சிக்கிட்டு எத்தனைபேர் எத்தனைவிதமான அக்கிரமங்கள் செய்யிறாங்க தெரியுங்களா? ரெண்டொரு ஆளுக்கு ரெண்டு தரத்துக்கு சம்பளம் குடுக்குறாங்க...''

''வாட்?'' என்று துள்ளிக் குதித்தார் பெரியதுரை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



தோட்டப் பாடசாலை ஒன்றின் ஆசிரியராக வாழ்க்கையை ஆரம்பித்த தெளிவத்தை ஜோசப், தற்போது கொழும்பிலுள்ள தொழில் நிறுவனமொன்றில் கணக்காளராக பணியாற்றுகிருர். 1960க்குப் பின்னர் எழுத்துத் துறையில் பிரவேசித்த இவர், இன்று ஈழத்தில் உள்ள சிறந்த சிறுகதை, நாவல் எழுத்தாளர்களில் ஒருவராகத் திகழ்கின்ருர். வீரகேசரி நடாத்திய மலையக சிறுகதைப் போட்டிகளில் இருமுறை முதற் பரிசை தட்டிச் சென்ற பெருமை இவரைச் சாரும். இவரது சிறுகதைகள் ஈழத்திலும், தமிழ்நாட்டிலும் பிரசுரமாகும் பல சஞ்சிகைகளில் இடம்பெற்றுள்ளன.

மலையகத்தின் வளமான மண்ணில்
பிறந்த கதை இது!

சமுதாயத்தின் மேல்மட்டத்திலும், அடித்தளத்திலும் நடைபெறும் போராட்டங்களைச் சித்தரிக்கின்றது!

தெளிவான கதையோட்டம்!

விறுவிறுப்பான சம்பவங்கள்!

## ஒவ்வொருவரும்
## படிக்கவேண்டிய நாவல்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org